**வலிகாமம் தெற்கு பிரதேசசபை**
**யாழ்ப்பாண மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1. நிதிக்கூற்றுக்களைச் சமா்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2017 மாா்ச் 22 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மாா்ச் 24 திகதியும் கணக்காய்விற்காக சமா்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளா் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 17 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2016 திசெம்பா் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசாா் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது பின்பற்றப்பட்டிருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டிருந்தன.

(அ) உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்தில் 2015 ஆண்டு வரை செலுத்த வேண்டியிருந்த ரூபா 4,768,150 கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளுராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு 2016 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய ரூபா 340,446 வருமான செலவுக் கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு உரித்தில்லாத ரூபா 3,242,600 பெறுமதியான காணி நிலையான சொத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் நிலையான சொத்தின் பெறுமதி கூடுதலாக காட்டப்பட்டுள்ளது.

(ஈ) பிரதேச சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த 07 வாகனங்களின் பெறுமதி கணக்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் மோட்டாா் வாகனங்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

சபையினால் இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேடு, அளவைப்பதிவேடு காணி விற்பனவு வரி பதிவேடு ஆகிய பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

உறுதிப்படுத்திய பயனாளிகள் பட்டியல் சமா்பிக்காமையின் காரணமாக ரூபா 32,580 பெறுமதியான 03 கொடுக்கல்வாங்கல்களைக் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதுள்ளது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| 1990 ஒக்டோபர் 10 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்று நிருபம் | சபைக்கு சொந்தமான 36 வாகனங்களினது எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 88,725,538 தொகையாக இருந்ததுடன் நேரொப்பான முன்னைய ஆண்டில் செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 104,360,089 தொகையாகும். இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 15,634,551 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் தேறிய மிகையாக ரூபா 2,545,325 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் செயற்பாட்டின் தேறிய மிகையாக ரூபா 12,522,543 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டுக்கான இறுதி நிதிப்பெறுபேறுகள் ரூபா 9,977,218 ஆல் குறைவடைந்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய தொழிற்படு மூலதனம் ரூபா 218,452,637 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டின் தொழிற்படு மூலதனம் ரூபா 188,413,764 விளைந்திருந்தது. இது மீளாய்வாண்டிற்கான தொழிற்படு மூலதனம் ரூபா 30,038,873 ஆல் அதிகரித்துள்ளமையைக் காட்டுகின்றது.

### 2.4 வருமான நிர்வாகம்

#### 2.4.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2016**

| **வருமான விடயம்** | **மதிப்பிடப்பட்டது** | **உள்ளபடியானது** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள்** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| | 000 | 000 | 000 |
| ஆதனவரிகள் | 2,887 | 1,791 | 5,902 |
| குத்தகை வாடகைகள் | 36,522 | 34,294 | 2,258 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 12,310 | 20,001 | - |
| ஏனைய வருமானம் | 90,179 | 101,762 | 115,716 |
| **மொத்தம்** | **141,898** | **157,848** | **123,876** |

**2.4.2 ஆதனவரி**

ஆதனவரி ரூபா 5,901,887 இன்றுவரை அறவிடப்படாதுள்ளது.

**2.4.3 குத்தகை மற்றும் வாடகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) 2012 ம் ஆண்டிலிருந்து குத்தகை ரூபா 2,120,526 இன்றுவரை அறவிடப் படாமலுள்ளது.

ஆ) 02 கடைகளிற்கான வாடகைகள் ரூபா 103,445 இன்றுவரை அறவிடப்படாமலுள்ளது.

**2.4.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

09 தொலைத்தொடர்புக் கோபுரங்களிலிருந்து வரி அறவிடப் பட்டிருக்கவில்லை.

**2.4.5 முத்திரைக் கட்டணம்**

முத்திரைக் கட்டணம் ரூபா 107,204,178 இன்று வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையில் 124 பதவியினருக்கு அனுமதியளிக்கப்பட்டிருந்தபோதும் 115 பதவியினரே கடமையாற்றுகின்றனர். அதன் பிரகாரம் 12 பதவியினர் பற்றாக்குறையாகவும் 03 பதவியினர் மிகையாகவும் உள்ளனர்.

(ஆ) வீதியோரத்தில் நடப்பட்டுள்ள மரங்களுக்கான பராமரிப்புச் செலவுக்காக கிடைத்திருந்த ரூபா 927,781 உரிய தேவைக்குப் பயன்படுத்தப்படாமலுள்ளது.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

ரூபா 932,230 பெறுமதியான 03 மூலதன வேலைகள் இன்றுவரை சபையினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்திட்டத்தின் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விளையாட்டு மைதானத்திற்கு 407 மீற்றர் சுற்றுமதில் அமைப்பதற்காக ரூபா 3,250,000 நிதி ஒதுக்கப்பட்டிருந்தபோதும் இன்றுவரை நிர்மாண வேலை நிறைவு செய்யப் பட்டிருக்கவில்லை.

(ஆ) மயானத்தில் எரி கொட்டகை அமைப்பதற்காக ரூபா 532,230 ற்கு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளபோதும் குறித்த திட்டம் பிரதேசசபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டுள்ளது.

**4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

**செலவினக் கட்டமைப்பு**

பாதீட்டுச் செலவினங்களுக்கும் உண்மைச் செலவினங்களுக்கும் இடையே ரூபா 3 தொடக்கம் ரூபா 14,663,530 வரையான செலவின வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.